# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.452** **நாள்:07.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த மாவட்ட அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர் டாக்டர் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த மாவட்ட அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர் டாக்டர் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் ரிப்பன் கட்டட வளாகம் அம்மா மாளிகை கூட்டரங்கில் இன்று (07.09.2026) நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் டாக்டர் தேவ பார்த்தசாரதி (தொற்று நோய் பிரிவு), இணை இயக்குநர் டாக்டர் செந்தில் குமார் (VBDC), மாநகர நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், தலைமை பூச்சியியல் வல்லுநர் திரு.செல்வகுமார், கூடுதல் மாநகர நல அலுவலர்கள், மண்டல நல அலுவலர்கள், துப்புரவு அலுவலர்கள், பூச்சியியல் வல்லுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தாக்கம் குறித்து மண்டல நல அலுவலர்களுடன் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர் கலந்தாய்வு செய்து, நோய்த் தாக்கம் குறித்து மண்டலங்களில் மிகுந்த கவனமுடனும் தொடர்ந்து கண்காணிப்புடனும் பணிபுரிய கீழ்கண்டவாறு அறிவுறுத்தினார்.

அரசு மருத்துவமனைகள், காலி மனைகள், மருத்துவமனை வளாகங்கள், பள்ளி வளாகங்கள், அரசு அலுவலகங்கள், பூங்காக்கள், புதிய கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்கள் ஆகியவற்றில் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தும் பணி தீவிரப்படுத்தபட வேண்டும்.

நோய்த் தாக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளையும், குணமடைந்து வீடு திரும்பிய நோயாளிகளையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் கண்டவர்கள் குறித்து தினந்தோறும் அறிக்கையினைப் பெற்று அதை செயலியில் (IDSP) பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு குறித்து அனைத்து பள்ளிகளிலும் பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரக் கல்வி அளிக்கப்பட வேண்டும்.

நோய்த் தாக்கம் காணப்படும் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

கொசு ஒழிப்புப் பணியாளர்கள் மூலம் தினந்தோறும் பணி நடைபெறும் அனைத்து வீடுகளிலும் காய்ச்சல் கண்டவர்கள் குறித்து தகவல் சேகரித்து அதை உடனடியாக கோட்ட சுகாதார ஆய்வாளர்களுக்கு தெரிவித்து செயலி (IDSP) மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

அனைத்து கோட்ட சுகாதார ஆய்வாளர்களும் தங்கள் கோட்டத்திற்குட்பட்ட குடியிருப்போர் நல சங்கங்கள் மூலம் அடுக்குமாடி குடியிருப்பில் டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தப்படும் மருந்துதெளிப்பான்கள், பவர்ஸ்ப்ரேயர்கள், பேட்டரி மூலம் இயங்கும் ஸ்ப்ரேயர்கள், கையினால் இயங்கும் புகைப்பரப்பும் இயந்திரங்கள், சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்கள் கொண்டு கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் பற்றியும், ஏடிஸ் கொசு உற்பத்தி பற்றியும், அது தடுக்கும் வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தற்போது மழை அவ்வப்பொழுது பெய்து வருவதால், மழைநீர் தேங்கக்கூடிய இடங்களில் கொசுப்புழுக்கள் வளர வாய்ப்புள்ளதால் பொது மக்கள் தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தில் உபயோகமற்ற டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உடைந்த சிமெண்ட்தொட்டிகள் முதலியவற்றில் தண்ணீர் தேங்கி கொசுப்புழுக்கள் உருவாகாத வகையில் அதனை உடனடியாக அகற்ற வேண்டும். மேலும், கிணறு, மேல்நிலைத்தொட்டி, கீழ்நிலைத்தொட்டி, தண்ணீர் தொட்டிகள் முதலியவற்றை கொசுக்கள் மற்றும் கொசுப்புழு புகாத வகையில் மூடி வைக்க வேண்டும். தண்ணீர் நிரப்பிய பூஜாடி மற்றும் கீழ்த்தட்டு, குளிர் பதன பெட்டியின் கீழ்த்தட்டு, மணி பிளான்ட் போன்றவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரை வாரமொருமுறை அகற்றி தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாகப் பராமரிக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**